



# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387

உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்

ANANDA BHASKAR

www.anandabhaskar.com





சென்னை மலர்: 01 இதழ்: 103 08.10.2025 புதன்கிழமை

Chennai Volume: 01 Issue: 103 Wednesday pages 4 Rs.5/-

## இன்றைய நாள்

புதன்கிழமை
(8–10–2025)
விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–22

பிறை: தேய்பிறை

திதி
பிரதமை காலை 7.40 வரை
பிறகு துவிதியை பின்னிரவு 3.48 வரை
பிறகு திருதியை

நட்சத்திரம்:
அசுவினி பின்னிரவு 2.08 வரை
பிறகு பரணி

யோகம்
மரண/சித்தயோகம்

ராகுகாலம்
நண்பகல் 12.00–1.30 மணி.

எமகண்டம்
காலை 7.30–9.00 மணி.

சூலம் – வடக்கு.

நல்ல நேரம் :
காலை 6–7 மணி. மாலை 4–5 மணி

| | |
|---|---|
| மேஷம் | பக்தி |
| ரிஷபம் | நன்மை |
| மிதுனம் | சிந்தனை |
| கடகம் | பரிசு |
| சிம்மம் | உற்சாகம் |
| கன்னி | லாபம் |
| துலாம் | உயர்வு |
| விருச்சிகம் | சாந்தம் |
| தனுசு | லாபம் |
| மகரம் | பயணம் |
| கும்பம் | நற்செயல் |
| மீனம் | புகழ் |

# உற்பத்தி துறையின் முன்னோடி தமிழகம்: முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை,அக்.8:**

உற்பத்தி துறையின் லீடராக தமிழகம் மாறி வருகிறது என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று (அக் 07) சர்வதேச வணிக மாநாட்டை தொடங்கி வைத்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: உலகை ஈர்க்கக்கூடிய மாநிலமாக தமிழகம் உயர்ந்துள்ளது. உற்பத்தி துறையில் தமிழகம் சிறந்து விளங்குகிறது.

தமிழகம் நடத்தும் மாநாடு தான் உலக அளவில் பேசப்படுகின்றன. இந்தியாவின் வாகன உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 40 சதவீதம். 3ல் இரண்டு பங்கு மின்னணு டூவீலர் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்தியாவில் மின்னணு பொருள் ஏற்றுமதியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

உலக அளவில் வளரும் பொருளாதார மாநிலமாக தமிழகம் உள்ளது. தமிழகம்





அனைத்து வகையான தொழில்களிலும் தடம் பதித்ததோடு, உற்பத்தி துறையின் லீடர் ஆக மாறி வருகிறது. அனைத்து விதமான வளர்ந்துவரும் தொழில்களை கொண்ட மாநிலமாக தமிழகம் சிறந்து விளங்குவதன் அடையாளம் தான் இந்த மாநாடு.

தமிழகத்தில் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன. எதை செய்தாலும் ஆல்ரவுண்டாக, பெஸ்ட்டாக செய்வதால்தான் இது சாத்தியம் ஆகி உள்ளது.

இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை பெற்ற ஒரே மாநிலமாக தமிழகம் உள்ளது. பாதுகாப்பு துறையில் முக்கிய மையமாக தமிழகம் மாறும் என்று நம்புகிறேன். உயர்தர ஜெட் இன்ஜின் பாகங்களில் இருந்து டிரோன்கள் உற்பத்தி வரை நடக்க உள்ளது. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## கோவை மேம்பாலத்துக்கு ஜி.டி. நாயுடு பெயர் அறிவிப்பு



கோவை அவிநாசி சாலையில் ரூ. 1791 கோடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள 10.1 கிலோமீட்டர் நீளம் கொண்ட மேம்பாலத்துக்கு விஞ்ஞானி ஜி.டி.நாயுடு பெயர் சூட்டப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கை: 2020ல் அறிவிக்கப்பட்டு, 2021ம் ஆண்டு மே மாதம் வரையில் 5% பணிகள் மட்டுமே நடைபெற்றிருந்த அவினாசி சாலை மேம்பாலத்தை திமுக அரசு பொறுப்பேற்று, ரூ.1,791 கோடி செலவில் 10.10 கி.மீ நீளமுள்ள இந்தப் பாலத்தின் மீதமிருந்த 95% பணிகளையும் விரைந்து முடித்துள்ளது.

கோவை மக்களின் நீண்டநாள் கோரிக்கையான இந்த 'அவினாசி சாலை உயர்மட்ட மேம்பாலத்தை நாளை மறுநாள் மக்களின் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்க இருக்கிறேன். கோவை என்றாலே புதுமை என்பதற்கேற்ப, புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளால் பெருமை சேர்த்த இந்தியாவின் எடிசன், ஜிடிநாயுடுவின் பெயரை இந்த மேம்பாலத்துக்குச் சூட்டி மகிழ்கிறேன். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

## கரூரில் கூட்ட நெரிசலில் உயிரிழந்தோர் குடும்பத்தினரிடம் வீடியோ காலில் பேசிய விஜய்

**சென்னை,அக்.8:**



தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் கடந்த 27-ந்தேதி கரூரில் பிரசாரம் செய்த போது திடீரென ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக போலீசார் பொதுச்செயலாளர் என்.ஆனந்த், இணைப் பொதுச்செயலாளர் சி.டி. நிர்மல்குமார் ஆகியோர் மீது வழக்குப்ப திவு செய்துள்ளனர்.

இருவரும் முன் ஜாமீன் கேட்டு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

41 பேர் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து கடந்த வாரம் விஜய் உருக்கமாக பேசி வீடியோ வெளியிட்டிருந்தார். மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூ.20 லட்சம் நிதி உதவியும் அறிவித்தார்.

பலியானோர் குடும்பத்தை விரைவில் நேரில் சந்தித்து ஆறுதல் சொல்ல வருவதாகவும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களை தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் விரைவில் நேரில் சந்திக்க இருக்கும் நிலையில் நேற்று மாலை 4.30 மணியளவில் பலியானோர் குடும்பத்தினருடன் விஜய் வீடியோ காலில் பேசி ஆறுதல் தெரிவித்தார்.

கூட்ட நெரிசலில் பலியான தனுஷ்குமார் அம்மா, தங்கை ஹர்ஷினியுடன் வீடியோ காலில் பேசிய விஜய், "நடக்க கூடாத நிகழ்வு நடந்து விட்டது. எந்த வகையிலும் ஈடு செய்ய முடியாத இழப்பு. எப்போதும் உங்கள் குடும்பத்துக்கு துணை நிற்பேன். விரைவில் உங்களை சந்திப்பேன்" என தனுஷ்குமார் தாயாரிடம் பேசினார்.

தனுஷ் சகோதரியிடம் பேசுகையில், "ஒரு அண்ணன் ஸ்தானத்தில் இருந்து எப்போதும் உங்களுக்காக துணை நிற்பேன். மேலும் நேரில் உங்களை நிச்சயம் சந்திப்பேன்" என விஜய் ஆறுதல் தெரிவித்தார்.

தனுஷ்குமார் உறவினர்களிடம் சுமார் 20 நிமிடங்கள் விஜய் பேசியுள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடம் விஜய் வீடியோ காலில் பேசி ஆறுதல் தெரிவித்ததை தனுஷ்குமாரின் உறவினர் தமிழரசன் உறுதிப்படுத்தியுள்ளார்.

தொடர்ந்து தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பலியானோர் குடும்பத்துடன் வீடியோ காலில் பேச இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

## கடவுள் தான் என்னை தலைமை நீதிபதி மீது காலணி வீச வைத்தார் என கூறிய வழக்கறிஞர்

**புதுடில்லி,அக்.7:**




உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் மீது ராகேஷ் கிஷோர் என்று வழக்கறிஞர் காலணி வீச முயன்றார். மேலும், 'சனாதன தர்மத்தை அவமதிப்பதை இந்தியா பொறுத்துக் கொள்ளாது' என கூச்சலிட்ட வழக்கறிஞரை நீதிமன்ற பாதுகாவலர்கள் வெளியேற்றினர்.

இருப்பினும், "கவனத்தை சிதறவிடாதீர்கள், இது என்னைப் பாதிக்காது" என கூறி எந்த பரபரப்பும் இன்றி வழக்கறிஞர்களிடம் வாதங்களைத் தொடருமாறு பி.ஆர்.கவாய் கேட்டுக் கொண்டார்.

இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தமிழக முதல்வர் ஸ்டாலின், கேரள முதல்வர் பினராயி விஜயன் உள்ளிட்ட பலர் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தனர்.

பிரதமர் மோடி கவாய்-க்கு போன் செய்து இந்த தாக்குதல் குறித்து கேட்டறிந்து சமூக வலைத்தளத்தில் தனது கண்டனத்தை பதிவு செய்தார்.

இதையடுத்து தலைமை நீதிபதி மீது காலணி வீச முயன்ற வழக்கறிஞர் ராகேஷ் கிஷோரின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

நீதிபதி மீது காலணி வீச முயன்றது தொடர்பாக எனக்கு எந்த வருத்தமும் இல்லை என்று வழக்கறிஞர் ராகேஷ் கிஷோர் தெரிவித்துள்ளார்.

ANI செய்தி நிறுவனத்திடம் பேட்டி அளித்த வழக்கறிஞர் ராகேஷ் கிஷோர், "செப்டம்பர் 16 ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தலைமை நீதிபதி அந்த வழக்கை கேலி செய்தார். நமது சனாதன தர்மம் தொடர்பான ஒரு வழக்கு வரும்போது, உச்ச நீதிமன்றம் இத்தகைய உத்தரவுகளை பிறப்பிக்கிறது. மனுதாரருக்கு நிவாரணம் வழங்கவில்லை என்றாலும் அவரையும் கேலி செய்யாதீர்கள்.

இதனால் நான் காயப்பட்டேன்... நான் குடிபோதையில் இதை செய்யவில்லை. அவரது செயலுக்கு நான் எதிர்வினை ஆற்றினேன். இதற்காக நான் பயப்படவில்லை. நடந்ததற்கு வருத்தப்படவும் இல்லை

இதற்காக நான் மன்னிப்பு கேட்கப் போவதில்லை. கடவுள் தான் என்னை இதைச் செய்ய வைத்தார். அவர் விரும்பினால் நான் சிறைக்குச் செல்ல தயார். நான் தூக்கிலிடப்பட வேண்டும் என்றாலும் அது கடவுளின் விருப்பம் தான்" என்று தெரிவித்தார்

முன்னதாக மத்திய பிரதேசத்தில் உள்ள கஜுராகோ கோவில் வளாகத்தில் உள்ள ஜவாரி கோவிலில் சேதம் அடைந்த கடவுள் விஷ்ணுவின் சிலையை சரி செய்து மீண்டும் நிறுவ தொல்லியல் துறைக்கு உத்தரவிட வேண்டும் என ராகேஷ் தலால் என்பவர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி கவாய் தலைமையிலான பெஞ்ச் முன் விசாணைக்கு வந்தது. அப்போது மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள மறுப்பு தெரிவித்தது.

அத்துடன் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய், "இந்த மனு முற்றிலும் சுய லாபம் நோக்கம் கொண்டது. கடவுளிடம் சென்று ஏதாவது செய்யச் சொல்லுங்கள். நீங்கள் கடவுள் விஷ்ணுவின் கடுமையான பக்தர் என்று சொல்லிக் கொள்வீர்கள் என்றால், பிரார்த்தனை செய்து, தியானம் செய்யுங்கள்" என்று தெரிவித்திருந்தார்.

இது சமூக வலைத்தளங்களில் பேசப்பட்டு சர்ச்சையானது. இதனையடுத்து நான் அனைத்து மதங்களையும் மதிக்கிறேன். எனது கருத்து தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளது என கவாய் விளக்கம் அளித்தார்.

## பீஹார் தேர்தலில் போட்டியிடும் காங். வேட்பாளர்கள்; நாளை கூடுகிறது காங்கிரஸ் மத்திய தேர்தல் குழு




**புதுடில்லி,அக்.8:**

பீஹார் சட்டசபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தேர்வு செய்ய காங்கிரஸ் மத்திய தேர்தல் குழு நாளை (அக்.8) கூடுகிறது. பீஹார் சட்டசபைக்கு நவ.6 மற்றும் நவ.11 என இரு கட்டங்களாக ஓட்டுப்பதிவு நடைபெறும் என்று தலைமை தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. ஓட்டுகள் நவ.14ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகளும் அறிவிக்கப்பட இருக்கின்றன.

தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டு விட்ட நிலையில், வேட்பாளர்கள் பட்டியலை தயாரிப்பதில் அனைத்துக் கட்சிகளும் மும்முரமாகி விட்டன. பீஹாரில் எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது, கூட்டணிகளுக்கு எத்தனை இடங்கள் தருவது என்பது குறித்து காங்கிரஸ் முக்கிய ஆலோசனை நடத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, வேட்பாளர்களை தேர்வு செய்ய காங்கிரஸ் மத்திய தேர்தல் குழு நாளை (அக்.8) கூடுகிறது. இந்த கூட்டத்தில் இம்முறை மொத்தம் எத்தனை தொகுதிகள், எவ்வளவு வேட்பாளர்கள் என்பது இறுதி செய்யப்படும் என்று தெரிகிறது.

வெற்றிக்கான சாத்தியக்கூறுகள் உள்ள தொகுதிகள் எவை என்பது கூட்டத்தில் அடையாளம் காணப்பட்டு, அங்கு யாரை வேட்பாளராக நிறுத்தலாம் என்பது குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

## ரூ.90 ஆயிரத்தை நெருங்கிய தங்கம் விலை! கலக்கத்தில் நடுத்தர வர்க்கம்!


**சென்னை, அக்.8:**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ. 75 உயர்ந்து ஒரு கிராம் ரூ.11,200-க்கும், சவரனுக்கு ரூ.600 உயர்ந்து ஒரு சவரன் ரூ.89,600-க்கும் விற்பனையாகி வருகிறது.

வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் 166 ரூபாய்க்கும், ஒரு கிலோ வெள்ளி 1,66,000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் தொடர்ந்து ஏற்றத்திலேயே தினமும் ஜெட் வேகத்தில் ஏறிக்கொண்டிருக்கும் தங்கம் விலை கடந்த திங்கள்கிழமை (செப்.29) முதலே தொடர்ந்து உயர்ந்த வண்ணம் உள்ளது.

உலகளவில் நிலவும் பொருளாதார நிச்சயமற்றத் தன்மை காரணமாக உலக நாடுகள் தங்களது மத்திய வங்கிகளில் தங்கக்கட்டிகளை வாங்கிக் குவித்ததன் விளைவாகவும் தங்கத்தின் விலை விண்ணை முட்டும் வகையில் தொடர் ஏற்றம் கண்டுள்ளது.



அக்.3-இல் தங்கம் விலை சவரனுக்கு ரூ.400 குறைந்து ரூ.87,200-க்கு விற்பனையான நிலையில், சனிக்கிழமை விலை மீண்டும் உயர்ந்து, ஒரு சவரன் ரூ.87,600-க்கு விற்பனையானது.

நேற்று (திங்கள்கிழமை) காலையில் கிராமுக்கு ரூ.110-க்கும், சவரனுக்கு ரூ.880 உயர்ந்து சவரன் ரூ.88,480-க்கும் விற்பனை நிலையில், மீண்டும் மாலையில் வர்த்தகம் நிறைவடையும் தருவாயில் கிராமுக்கு ரூ. 65-க்கும், சவரனுக்கு ரூ. 520-ம் உயர்ந்து சவரன் ரூ. 89,000-க்கும் விற்பனையானது.

இந்த ஆண்டில் துவக்கத்தில் (ஜனவரி) சவரன் ரூ.60,000-க்கு விற்பனையான தங்கம் விலை, ஜூன் மாதத்தில் ரூ. 72,000-ஐயும், தற்போது கிட்டத்தட்ட ரூ. 90,000-ஐயும் நெருங்கியுள்ளது.

தங்கத்தின் விலை கடந்த 10 மாதங்களில் மட்டும் ரூ. 35,000 வரை ஒரு சவரன் தங்கம் விலை ஏற்றம் கண்டுள்ளது.

ஒருபுறம் விலை ஏறினாலும், தொடர்ந்து உயர்ந்து வருவதால் தங்கத்தின் மீது முதலீடு செய்ய பலரும் முனைப்பு காட்டுவதால் தீபாவளிக்கு முன்னதாகவே ஒரு சவரன் வரலாற்றில் இல்லாத நிலையில் ரூ. 1 லட்சத்தை எட்டும் என பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர். நடுத்தர வர்க்கத்தினர் கலக்கமடைந்துள்ளார்.

தினம்தோறும் வெளிவரும்
ஆனந்தபாஸ்கர் இதழை
https://epaper.
anandabhaskar.com/
இணையதளத்தில்
படித்து மகிழலாம்.

## நம் வாசவி சாகம்பரி அலங்காரத்தில் கன்யகா பரமேஸ்வரி அம்மன்



**மதுரை, அக்.8:**

மதுரை ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நம் வாசவி சாகம்பரி அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஸ்ரீ மீனாட்சி அம்மன் லட்டு தேர் அலங்காரம்





**கடலூர், அக். 8:**

கடலூர் மாவட்டம் புவனகிரி ஸ்ரீவெள்ளியம்பலம் சுவாமிகள் மடத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீமீனாட்சி சமேத ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீமீனாட்சி அம்மன் லட்டு தேரில் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம்



**திருவண்ணாமலை, அக்.8:**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப அவர்கள் பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள். உடன் அரசு அதிகாரிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**


## இந்தியாவின் பெருமை - RACER அஜித்துக்கு நயினார் நாகேந்திரன் புகழாரம்

**சென்னை, அக்.8:**

பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

சர்வதேச அளவிலான கார் பந்தயங்களில் களமிறங்கி, பல வெற்றிகளை குவித்து வரும் நடிகர் அஜித் குமாரின் 'Ajith Kumar Racing Team' அணி, 2025 ஆம் ஆண்டிற்கான Creventic 24H European Endurance Championship தொடரில் ஒட்டுமொத்தமாக 3 ஆம் இடம் பிடித்து, நம் தேசத்துக்கு பெருமை சேர்த்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது!

இந்த வெற்றியின் மூலம், நம் பாரத நாடு மட்டுமன்றி, நம் தமிழ்நாட்டின் பெருமையையும் உலகறியச்



செய்திருக்கிறார் அஜித் குமார் அவர்கள்!

மென்மேலும் அவரது அணி பல வெற்றிகளை குவிக்க எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்! என கூறியுள்ளார்.

## மங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை பார்வையிட்டு ஆய்வு



**திருவண்ணாமலை,அக். 8:**

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் மங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைதுணைத்தலைவர் திரு.கு.பிச்சாண்டி அவர்களும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கதர்ப்பகராஜ், இஆப அவர்களும் நேற்று (07.10.2025) துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மங்கலம் ஊராட்சியில் உள்ள எம்கேஜி திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் துறைவாரியாக பதிவு செய்யப்படுவதைபார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ் நாட்டில் உள்ள கடைக்கோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள், திட்டங்களை அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்ற முன்னோடி திட்ட முகாம் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டு மாநிலம் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் நகர்ப்புறம் மற்றும் ஊரக பகுதிகளில் இதுநாள் வரை மொத்தம் 258 முகாம்கள் நடைபெற்றுள்ளது. அதன்படி இன்றைய தினம் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மங்கலம் ஊராட்சியில் உள்ள எம்கேஜி திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை ஆய்வு மேற்கொண்டார்கள். இம்முகாமில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பெற்று 4 ஆண்டுகள் ஆட்சி காலத்தில் மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை இந்தியாவிலேயே எந்த மாநிலமும் செய்யாத அளவிற்கு சிறப்பான திட்டங்களை ஏழை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் மக்களின் தேவைகள் நிறைவேற்றிட வேண்டும் என்ற நோக்கத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது. இன்றைய தினம் துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மங்கலம் ஊராட்சியில் உள்ள எம்கேஜி மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பொதுமக்கள் தேவைகளை நிறைவேற்ற அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்களும் பணியாற்றி வருகிறார்கள். இந்த முகாம்களில் தூய்மை பணியாளர்களுக்கு துய்மை பணியாளர் நலவாரிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நலவாரிய அட்டை யின் மூலமாக விபத்து இறப்புக்கு ரூ.5 இலட்சம், கை,கால் மற்றும் பார்வை இழப்போருக்கு ரூ.1 இலட்சம், ஏனைய காயங்களுக்கு ரூ.1 இலட்சம், இயற்கை மரணம் உதவித்தொகை ரூ.20000, ஈமச்சடங்கு உதவித்தொகை ரூ.5000, முதியோர் ஒய்வூதியம் ரூ.1000, திருமண உதவித்தொகை(2 முறை மட்டும்) ஆண்களுக்கு ரூ.3000 மற்றும் பெண்களுக்கு ரூ.5000, மகப்பேரு உதவித்தொகை ரூ.6000, கருச்சிதைவு மற்றும் கருகலைப்புக்கு ரூ. 3000 போன்ற உதவித்தொகைகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் இம்முகாமில் பதியபடுகின்றன.

மேலும் இந்த முகாமில் அளிக்கப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் நடவடிக்கைமேற்கொள்ளப்படும் பொதுமக்கள் அனைவரும் இம்முகாமில் தேவைகளை கோரிக்கை மனுக்களாக அளித்து பயன்பெற வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைதுணைத்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு பட்டா மாற்றத்திற்கான சான்றிதழ்களும், வாரிசு சான்றிதழ்களும், சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ்,மின் இணைப்புக் கான ஆணைகள், தூய்மை பணியாளர் நல வாரிய அட்டைகள் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டிற்கான அட்டைகள் ஆகியவற்றை பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைதுணைத்தலைவர் அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் வழங்கினார்கள்.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா. இராம்பிரதீபன், துரிஞ்சாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


## ராமதாசை நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர் நடிகர் கமல்ஹாசன்

**சென்னை, அக். 8:**

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் உடல்நலக் குறைவு காரணமாக சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இதைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோர் நேற்று இரவு ராமதாசை நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர். நேற்று காலை நடிகர் கமல்ஹாசன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

இந்நிலையில் டாக்டர் ராமதாஸ் சிகிச்சை பெறும் தகவல் இமயமலையில் ஆன்மீக சுற்றுப் பயணம் செய்து வரும் ரஜினிக்கு தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்த



ரஜினிகாந்த் உடனடியாக டாக்டர் ராமதாசை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நலம் விசாரித்தார். மேலும் விரைவில் பூரண நலம் பெற வேண்டிக்கொள்வதாகவும் டாக்டர் ராமதாசிடம் ரஜினி தெரிவித்தார்.

## ஸ்ரீவைகுண்டம் அருகே பிளஸ்-1 மாணவனை கத்தியால் குத்திய போலீஸ் ஏட்டு கைது

**தூத்துக்குடி, அக். 8:**

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள ஆழ்வார்திருநகரியை சேர்ந்தவர் சிவனேச செல்வன் (வயது 41). ஏரல் போலீஸ் நிலையத்தில் ஏட்டாக பணியாற்றி வருகிறார்.

இவர் தனது குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து செல்வதற்காக ஆழ்வார்திருநகரி பஸ் நிலையத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்தார். அப்போது அங்கு ஆழ்வார்திருநகரி யாதவர் தெருவை சேர்ந்த செந்தில் ஆறுமுகம் (22) என்பவர் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்துள்ளார்.

அவரிடம் ஏன் இப்படி வேகமாக செல்கிறாய் என்று சிவனேச செல்வன் கண்டித்துள்ளார். இதில் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.


அப்போது செந்தில் ஆறுமுகத்தின் சித்தி மகனான பிளஸ்-1 படிக்கும் அர்ஜூன் (16) என்பவர் அங்கு வந்தார். இருவருக்கும் இடையே நடந்த வாக்குவாதத்தை பார்த்ததும் அர்ஜூன் போலீஸ் ஏட்டுவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த சிவனேச செல்வன் தனது மோட்டார் சைக்கிளின் சாவியில் இருந்த பாக்கெட் கத்தியால் சிறுவன் அர்ஜூனை குத்தியுள்ளார். இதில் அர்ஜூன் படுகாயம் அடைந்தார்.

அர்ஜூனை மீட்டு ஸ்ரீவைகுண்டம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு சேர்த்தனர். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்த சம்பவம் குறித்து சிவனேச செல்வன் ஆழ்வார்திருநகரி போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் சிவனேச செல்வன் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர்.

## புரட்டாசி மாதம் பௌர்ணமியை முன்னிட்டு அம்பிகைக்கு சிறப்பு வழிபாடு







**திருவண்ணாமலை, அக்.8:**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டம் கல்பூண்டி ஊராட்சியில் அமைந்திருக்கும் வெட்காளியம்மனுக்கும், வக்ரகாளியம்மனுக்கும் புரட்டாசி மாத பௌர்ணமியை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ சந்துரு சாமி அவர்களால் சிறப்பு அபிஷேகம், அலங்காரங்கள், சந்தனக் காப்பில் அலங்காரம், யாக வேள்வி தீபாராதனையும் நடைபெற்றது. கடன்புறப்பாடு, மற்றும் பரதநாட்டியம் இளம் சிறுமங்கைசாருலதா,ஹேமலதா நடத்தினார்கள். மற்றும் சொற்பொழிவாளர் உதய ராணி அவர்களால் சொற்பொழிவு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அன்னதானம் தீபாராதனையும் பிரசாதமும் வழங்கப்பட்டது. ஏராளமான பக்தர்கள் வெட்காளியம்மனையும், வக்ர காளியம்மனையும் வேண்டி அருள் பெற்றனர் .

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

**திருவண்ணாமலை, அக். 8:**

தனியார் துறை நிறுவனங்களும் தனியார் துறையில் பணிபுரிய விருப்பம் உள்ள அனைத்து வகை பதிவுதாரர்களும் நேரடியாக சந்திக்கும் "வேலைவாய்ப்புமுகாம்" இம்மாதம் எதிர்வரும் 10.10.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் நடைபெற உள்ளது. இம்முகாமில் 30-க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு 500-க்கும் மேற்பட்ட பணிக்காலியிடங்களுக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்ய உள்ளனர்.



எட்டாம் வகுப்பு, 10-ஆம் வகுப்பு, 12-ஆம் வகுப்பு, பட்டப்படிப்பு, முதுநிலைப்பட்டப்படிப்பு, பொறியியல், ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் தேர்ச்சி பெற்ற வேலைநாடுநர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம். முகாம் அன்று தங்களுடைய பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், ரேஷன் அட்டை, ஆதார்அட்டை, சாதிச்சான்று, கல்வி தகுதி சான்றிதழ்களின் நகலுடன் முகாமில் கலந்துகொள்ள வேண்டும். முகாமில் கலந்துகொள்ள விருப்பமுள்ள வர்கள் www.tnprivatejobs.tn.gov in என்ற இணையதள முகவரியிலும் பதிவு செய்யலாம். மேலும் விபரங்களுக்கு 04175-233381 என்ற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே திருவண்ணாமலை மாவட்டத்தை சார்ந்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ், இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## பள்ளி மாணவர்களின் விடுதி கட்டிடம் திறப்பு விழா






**திருவண்ணாமலை, அக். 8:**

திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவலம் பேரூராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் 100 பள்ளி மாணவர்கள் விடுதி கட்டிடத்தை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் குத்துவிளக்கேற்றி மாணவர்களின் பயன்பாட்டிற்கு ரிப்பன் வெட்டி பள்ளி விடுதியை திறந்து வைத்தார். உடன் பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள், கழகத் தோழர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## துணை முதலமைச்சர் பாராட்டு

**சென்னை, அக். 8:** 24எச் ஐரோப்பிய சாம்பியன்ஷிப் கார் பந்த யத்தில் அஜித்குமார் ரேசிங் அணி மூன்றாவது இடம் பிடித்த செய்தி அறிந்து பெருமை கொண்டதாக துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அரங்கில் இந்தியாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் அஜித்குமார் மற்றும் அவரது அணிக்கு மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இத்தகைய பெருமைக்குரிய போட்டியில் எஸ்டிஏடி லோகோவை ஜெர்சி, வாகனத்தில் பொறித்து விளையாடியதற்கு தமிழ்நாடு அரசு சார்பில் நன்றி தெரிவித்துள்ளார். ரேசிங் களத்தில் இன்னும் பல வெற்றிகளை குவிக்க வாழ்த்துவதாகவும் அவர் தனது பாராட்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தேர்வு நுழைவுச் சீட்டு வெளியீடு

**சென்னை, அக். 8:** சென்னை மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும், கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்காக சென்னை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் 6.8.2025 அன்று அறிவிக்கைவெளியிடப்பட்டது. அதற்கான எழுத்துத் தேர்வு அக்.11 அன்று நடத்தப் படவுள்ளது. இத்தேர்விற்கான தேர்வுக் கூட நுழைவுச் சீட்டை, அக்.5 ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) முதல் சென்னை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதள முகவரியான WWW.DRBCHN.IN இலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள லாம். கூடுதல் விவரங்களுக்கு ARCHN.RCS@GMAIL.COM மின்னஞ்சல் மற்றும் 044-24614289 தொலைப்பேசி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என்று கூட்டுறவுச் சங்கங் களின் கூடுதல் பதிவாளர், சென்னை மண்டலம் தலைவர் தெரிவித்துள்ளார்.

# பிரேமலதா தாயார் காலமானார்!



**சென்னை, அக்.8:** தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதாவின் தாயார் அம்சவேணி செவ்வாய்க்கிழமை காலமானார். அவருக்கு வயது 83.

சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் வயது மூப்புக் காரணமாக ஏற்பட்ட உடல்நலப் பிரச்னைக்காக கடந்த சில நாள்களாக அம்சவேணி சிகிச்சைப் பெற்று வந்தார்.

இந்த நிலையில், சிகிச்சைப் பலனின்றி நேற்று காலை 7.30 மணியளவில் அவர் உயிரிழந்ததாக பிரேமலதாவின் சகோதரர் எல்.கே. சுதீஷ் தெரிவித்துள்ளார்.

மேலும், சென்னை விருகம்பாக்கத்தில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள அம்ச வேணியின் உடல், இன்று (அக். 8) 1 மணியளவில் ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டு வட பழனி ஏவிஎம் மின்மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இவருக்கு தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா, புதுச்சேரி ராமச்சந்திரா மருத்துவமனை தலைவர் ராதா ராமச்சந்திரன் ஆகிய மகள்களும், தேமுதிக பொருளாளர் எல்.கே. சுதீஷ் என்ற மகனும் உள்ளனர்.

## முதலமைச்சர், எடப்பாடி பழனிசாமி இரங்கல்

**சென்னை, அக்.8:** முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

தே.மு.தி.க. பொதுச் செயலாளர் சகோதரி பிரேமலதா விஜயகாந்த் அவர்களுடைய தாயார் அம்சவேணி அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

பெற்றெடுத்து அன்பு செலுத்தி வளர்த்த அன்னையை இழந்து வாடும் பிரேமலதா விஜயகாந்த், தே.மு.தி.க.வின் பொருளாளர் எல்.கே.சுதீஷ் உள்ளிட்ட அவர்களது குடும்பத்தினர் அனைவர்க்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,தே.மு.தி.க. பொதுச்செயலாளர் அன்புச் சகோதரி பிரேமலதா, பொருளாளர் எல்.கே.சுதீஷ் ஆகியோரின் தாயாரான அம்சவேணி அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

பாசமிகு தாயாரை இழந்து வாடும் பிரேமலதா, சுதீஷ் மற்றும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களையும் வருத்தங்களையும் ரெிவித்துக்கொள்வதுடன், மறைந்த அம்சவேணி அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# தமிழ்நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தும் பிரித்தாளும் முயற்சிகளில் அரசியல் கட்சிகள் ஈடுபடுகின்றன: கவர்னர்



**சென்னை, அக். 8:** தமிழ்நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தும் பிரித்தாளும் முயற்சிகளில் அரசியல் கட்சிகள் ஈடுபடுகின்றன என கவர்னர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

சுவாமி திருவருட்பிரகாச வள்ளலாரின் 202-வது அவதார தினத்தையொட்டி, கவர்னர் ஆர்.என்.ரவி பக்தர்களுடன் கவர்னர் மாளிகையின் வள்ளலார் பூங்காவில் வள்ளலாருக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதன்பின்னர் கவர்னர் ஆர்.என்.ரவி பேசியதாவது:-

கடந்த 2 நாட்களாக வள்ளலாரின் போதனைகளால் ராஜ்பவன் புனிதமாகிவிட்டது. இன்று காலையில் நான் தூங்கி எழும்போது வள்ளலாரின் போதனைகளை கேட்டேன். உலகில் இருக்கும் பிரிவினைவாதம், வறுமை ஆகியவற்றை போக்கும் வழிகள் வள்ளலார் தத்துவத்திற்கு உள்ளது.

வடலூர் சென்று வள்ளலாரை வணங்கிவிட்டு வந்த பிறகு தான் சிலவற்றை உணர்ந்தேன். அவருக்கு கொடுக்க வேண்டிய மரியாதை இன்னமும் கிடைக்காதது வருத்தமாக இருந்தது. அதனால் தான் 2023 முதல் வருடம் தோறும் ராஜ்பவன் வள்ளலார் விழாவை நடத்துகிறது. வள்ளலாரை தினமும் வணங்க வேண்டும் என்பதற்காக கிண்டி ராஜ்பவனில் வள்ளலார் சிலையை அமைத்தேன்.

"நான் மாநிலம் முழுவதும் பயணிக்கும்போது, 'தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்' என்று சுவர்களில் எழுதியுள்ளார்கள். யாருடன் போராடும் தமிழ்நாட்டை எதிர்த்து யாரும் போராடவில்லை. இங்கு எந்த சண்டையும் இல்லை. நாம் கண்டிப்பாக இணைந்து வாழ வேண்டும். நாட்டின் பல இடங்களில் சாதிய ஏற்றத்தாழ்வு இருந்தாலும் அதிகம் படித்தவர்கள் இருக்கும் தமிழ்நாட்டிலும் அது இருக்கிறது. 50 சதவீத உயர்கல்வி விகிதம் கொண்ட தமிழ்நாட்டில் பட்டியலின மக்கள் மோசமாக நடத்தப்படுகின்றனர். பிரிவினையை ஏற்படுத்தும் பிரித்தாளும் முயற்சிகளில் அரசியல் கட்சிகள் ஈடுபடுகின்றன.

பிரதமர் மோடி சமரச சன்மார்க்கத்தை கடைப்பிடிக்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

## 'கோல்ட்ரிப்' மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் உரிமத்தை ரத்து செய்ய நடவடிக்கை: அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி




**சென்னை, அக்.8:** 'கோல்ட்ரிப்' மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் உரிமத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னைசைதாப்பேட்டை தொகுதியில் நேற்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 'அன்புக் கரங்கள்' திட்டத்தின் கீழ் பதிவு செய்த 300 குழந்தைகளுடன் ஒரு நாள் சுற்றுலா மேற்கொண்டார். அப்போது, குழந்தைகளுக்கு பிடித்த உடைகளை வாங்கி தந்து இனிப்புகள் வழங்கினார்.

பின்னர், அமைச்சர் மா.சுப்பிர மணியன் நிருபர்களிடம் கூறியதாவது:-

அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் 6 ஆயிரத்து 82 குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.2 ஆயிரம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் ஒருநாள் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டு அது சிறப்பாக அமைந்தது. இது எனது மனதுக்கு மகிழ்ச்சியை தந்தது.

கடந்த 1-ந் தேதி மத்திய பிரதேச மருந்து கட்டுப்பாட்டு துறையிடம் இருந்து தமிழக மருந்து கட்டுப்பாட்டு துறைக்கு அவசர கடிதம் ஒன்று வந்தது.

அந்த கடிதத்தில், சிந்த்வாரா மாவட்டத்தில் குழந்தைகள் இறப்புக்கு தொடர்புடையதாக கருதப்படும் 'கோல்ட்ரிப்' மருந்து தயாரிப்பு நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக நடைபெற்ற ஆய்வில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டு சர்ச்சைக்குரிய மருந்தான 'கோல்ட்ரிப்' உள்ளிட்ட 5 மருந்துகள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. ஆய்வின் முடிவில் 'டைதிலீன் கிளைகால்' என்ற உயிர்க்கொல்லி நச்சு வேதிப்பொருள் 'கோல்ட்ரிப்' மருந்தில் 48.6 சதவீதம் இருப்பதாக கண்டறியப்பட்டது. அன்றைய தினமே தமிழகம் முழுவதும் 'கோல்ட்ரிப்' மருந்து விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டது.

இதேபோல, ஸ்ரீசன் பார்மசியூட்டிகள் நிறுவனத்தின் உற்பத்தியை நிறுத்தி அந்த நிறுவனம் உடனடியாக மூடப்பட்டது.

உரிமத்தை முழுமையாக ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த தகவல்கள் அனைத்தும் மத்திய பிரதேச மருந்து கட்டுப்பாட்டு துறைக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. தமிழக அரசின் உடனடி நடவடிக்கையால் எந்த பாதிப்பும் தமிழத்தில் ஏற்படவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# பாம்பனில் மீனவர்கள் வலையில் சிக்கிய அபூர்வ 'டூம்ஸ்டே மீன்'




**ராமநாதபுரம், அக்.8:** பாம்பன் மீனவர்கள் வலையில் சிக்கிய அபூர்வ 'டூம்ஸ்டே மீன்' சிக்கியது. ஆழ்கடலில் மட்டுமே வாழும் இந்த மீன்கள் சிக்கியிருப்பது மீனவர்களிடையே வியப்பை ஏற்படுத்தியது.

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் விசைப்படகு மீனவர்கள் மன்னார் வளைகுடா கடல் பகுதிக்கு மீன் பிடிக்க சென்று இருந்தனர். இந்த மீனவர்கள் நேற்று கரை திரும்பினர். அப்போது ஒரு விசைப்படகு மீனவர்கள் வலையில் அரியவகை டூம்ஸ்டே மீன் ஒன்று சிக்கி இருந்தது. இது சுமார் 5 அடி நீளம் கொண்டதாக இருந்தது. இந்த வகை மீன்களை ஆசிய கடல் பகுதிகளில்தான் காண முடியும் எனவும், மிகவும் ஆழ்கடல் பகுதியில் மட்டுமே இருக்கும் எனவும் கூறுகிறார்கள்.

டூம்ஸ்டே மீன் பிடிபட்டால் உலகில் எங்காவது பேரழிவு ஏற்படக்கூடும் என்பது ஜப்பானிய மக்களின் ஒருவித நம்பிக்கை ஆகும்.

ஆனால் இது மூடநம்பிக்கை என்ற கருத்தும் உள்ளது. இந்தநிலையில் பாம்பன் மீனவர்கள் வலையில் சிக்கி இருக்கும் டூம்ஸ்டே மீன் சமூக வலைத்தளங்களில் விவாத பொருளாகி உள்ளது. ஆனால் இந்த அரிய வகை மீன் மிக குறைந்த விலைக்கே விற்பனை ஆனது குறிப்பிடத்தக்கது.

# சதுரகிரி மலையேறிய பக்தர் திடீர் சாவு



**விருதுநகர், அக்.8:** சிவகங்கை மாவட்டம் தென்கரையை சேர்ந்தவர் மகா (வயது 55). இவர் தனது உறவினரான முத்துகிருஷ்ணன் என்பவரோடு நேற்று சதுரகிரி சுந்தர மகாலிங்க சுவாமி கோவிலுக்கு வந்தார். சாமி தரிசனம் செய்ய மலையேறினார். சின்ன பசுக்களை என்ற இடத்தின் அருகே சென்றபோது திடீரென அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. இதனால் மயக்கம் அடைந்த அவர், சிறிது நேரத்தில் பரிதாபமாக இறந்தார். இந்த சம்பவம் குறித்து அடிவார பகுதிக்கு தகவல் கொடுக்கப்பட்டது. இதனையடுத்து அவரது உடலை டோலி கட்டி கீழே கொண்டு வந்தனர். பின்னர் அவரது உடல், பரிசோதனைக்காக உசிலம்பட்டி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த சம்பவம் குறித்து சாப்டூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சதுரகிரி மலையேறிய பக்தர் திடீரென உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



## தினம் ஒரு குறள்

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.** - குறள் 100

ఇంపు మాటలుండ నేలకో పరుషొక్తి
పండువదలి కాయఁ బట్టినట్లు. (౧౦౦) - కురళ్ 100

**रहते सुमधुर वचन के, कटु कहने की बान।**
**यों ही पक्का छोड़ फल, कच्चा ग्रहण समान॥** - कुराल 100

Iniya Ulavaaka Innaadha Kooral
Kaniiruppak Kaaikavarn Thatru - Kural 100

## நயினார் நாகேந்திரன் பிரசாரத்துக்கு காவல்துறை அனுமதி!



**சென்னை, அக். 8:** பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனின் பிரசாரத்துக்கு நிபந்தனையுடன் காவல்துறையினர் அனுமதி வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கரூர் விஜய் பிரசாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டதை தொடர்ந்து, அரசியல் கூட்டங்கள் நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கும்வரை புதிதாக எந்த கூட்டத்துக்கும் அனுமதி வழங்கப்படாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனின் 'தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்' சுற்றுப்பயணத்துக்கு நிபந்தனைகளுடன் காவல்துறையினர் அனுமதி அளித்துள்ளனர்.

மதுரையில் நடைபெறும் தொடக்க விழாவில், பாஜக தேசிய தலைவர் ஜெ.பி. நட்டா பங்கேற்று, நயினார் நாகேந்திரனின் பிரசாரத்தை அக். 12 ஆம் தேதி தொடங்கி வைக்கவுள்ளார்.

பிரசாரத்துக்கு வரும் மக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்த வேண்டும், குழந்தைகள், கர்ப்பிணிகள் பங்கேற்கக் கூடாது உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது.

மதுரையில் அக். 12 ஆம் தேதி தொடங்கும் நயினார் நாகேந்திரனின் முதல்கட்ட சுற்றுப்பயணம், நவ. 17 ஆம் தேதி நெல்லையில் நிறைவடைகிறது.

## 'சென்னை ஒன்' செயலியில் பஸ்களுக்கு மாதாந்திர பாஸ் பெறும் வசதி விரைவில் அறிமுகம்

**சென்னை, அக்.8:** இந்தியாவிலேயே முதன் முறையாக அனைத்து பொது போக்குவரத்தையும் இணைக்கும் வகையில் ஐ.ஓ.எஸ். மற்றும் ஆண்ட்ராய்டு தளங்களில் செயல்படக்கூடிய 'சென்னை ஒன்' மொபைல் செயலியை கடந்த மாதம் 22-ந்தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்த செயலி பஸ், புறநகர் ரெயில், மெட்ரோ ரெயில் மற்றும் கேப், ஆட்டோக்களை ஒரே கியூஆர் கோடு பயணச்சீட்டு மூலம் ஒருங்கிணைக்கிறது.

இதன் மூலம் பொதுமக்கள் பஸ்கள், மெட்ரோ மற்றும் புறநகர் ரெயில்களின் நிகழ்நேர இயக்கத்தை அறிந்து கொள்ளவும், யுபிஐ அல்லது கட்டண அட்டைகள் வழியாக பயணச் சீட்டுகளை பெற்றிடவும், ஒரே பயணப் பதிவின் மூலம் அனைத்து போக்குவரத்து முறைகளிலும் பயணம் செய்யவும் முடியும். இச்செயலி ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம் என பல மொழிகளில் மக்கள் பயன்படுத்திடும் வகையில் உருவாக்கப்பட்டு உள்ளது.

'சென்னை ஒன்' செயலி பொது போக்குவரத்து சேவையில் ஒரு முக்கியமான முன்னெடுப்பாகும். இனி பொதுமக்கள் பயணச் சீட்டு பெற வரிசையில் காத்திருக்க தேவையில்லை. இந்த செயலி மூலம் எளிதாக கட்டணம் செலுத்தி பயணச்சீட்டை பெற்று பயணம் செய்யலாம்.

## எடப்பாடி பழனிசாமி நரித்தனமாக செயல்படுகிறார்: தினகரன்

**திருச்சி, அக். 8:** அமமுக பொதுச் செயலாளர் திருச்சியில் ஊடக வியலாளர்களுக்கு அளித்த பேட்டியில், "வரும் சட்டமன்றத் தேர்தலில் துரோகி என்ற வார்த்தையை அரசியலில் நினைக்கவே கூடாது என்ற அளவுக்கு எடப்பாடி பழனி சாமிக்கு பதிலடி கொடுப்போம்" என்றார். "இன்றைய அதிமுக, ஜெயலலிதாவின் அதிமுக அல்ல. பொதுச் செயலாளர் பதவிக்கான ஜனநாயக அடிப்படையை தகர்த்துவிட்டார்" என்று விமர்சித்தார். கரூர் சம்பவம் குறித்த கேள்விக்கு, "விபத்தை அரசிய லாக்க வேண்டும் என்பதற்காக தமிழக வெற்றிக் கழகத்தை கூட்டணிக்கு இழுக்க நரித்தனமாகச் செயல்படுகிறார். தூத்துக் குடி சம்பவத்திற்கு பொறுப்பேற்காதவர், இப்போது எப்படி பேச முடியும்?" என்று கேள்வி எழுப்பினார். வரும் தேர்தலில் நான்கு முனைப் போட்டி நிலவும் என்றும் தெரிவித்தார்.

## ஆட்சியர் குறித்து அவதூறு

**கரூர், அக்.8:** கரூர் வேலுச்சாமிபுரத்தில் நடந்த தவெக பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த னர்.

இது தொடர்பாக முகநூலில் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் குறித்து அவதூறாக பதிவிடப்பட்டுள்ளது. இது குறித்து கரூர் எஸ்.பி. அலுவலகத்தில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செந்தில் அளித்த புகாரின்பேரில், தாந்தோணி மலை போலீசார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கவிதை அரங்கம்!





யாருக்காகவும் உன்னை
மாற்றி கொள்ளாதே
உனக்காக தன்னையே
மாற்றிக் கொள்ளும்
ஒருவரை
என்றும் கைவிடாதே

உன்னை மதிக்காத
இடத்தில்
பிணமாக கூட
இருக்காதே


வாழ்க்கையில் வெற்றி
அடைய முக்கியமான
மந்திரம் உனது
ரகசியங்களை
யாரிடமும் பகிராதே

நமக்கு பிடித்ததை தான்
நாம் செய்ய வேண்டுமே
தவிர
அது மற்றவர்களுக்கு
பிடிக்குமா
என்று யோசிக்க கூடாது

உண்மையும் நேர்மையும்
பயம் கொள்ளாது
மாறாக மரியாதை
தந்து பழகும்

பிடித்ததைப் பறித்துப்
பிடிக்காததை கொடுத்து
சந்தோஷமாக வாழ்
என்று சொல்லி சிரிக்கிறது
வாழ்க்கை

## தோல்வி வந்தா பயமா?



தோல்வி வந்தாலே பயப்பட வேண்டியதில்லை...

அதுவும் நம் வாழ்வில் ஒரு அங்கம் தான்...

தோல்வியை சந்திக்காத மனிதன் இந்த உலகத்தில் ஏது...

தோல்வியை ஒருவன் சந்திக்கவில்லை எனில் அவன் எந்த ஒரு புது முயற்சிகளையும் எடுக்கவில்லை என்று தானே அர்த்தம்...

தோல்வி என்பது உங்களை உயர்த்த உங்களை வடிவமைக்க வாழ்க்கை தரும் அருமையான பாடம்...

ஏன் தெரியுமா?

நம்மை ஊக்கப்படுத்த யாரும் இல்லாத நேரம்தான்...

நாம் உண்மையில் வலிமை பெற்றவர்கள் என்பதையும், நம் உள்ளுணர்வின் ஆழத்தை அறியும் துணிச்சலையும் உணர்த்தும்!

தோல்விகளையே சந்தித்து சந்தித்து மனம் வெதும்பி அதிலிருந்து கற்று உணர்ந்து எழுந்தவர்கள் தான்

தானும் வாழ்ந்து மற்றவர்களுக்கும் வழிகாட்டி ஆவார்கள்...

தோல்வி சொல்லும் ஒரு மகத்தான பாடம்:

"நீ விழுந்த இடம் முக்கியம் அல்ல...

நீ மீண்டும் எழும் தன்மைதான் வாழ்க்கையின் உண்மையான அழகு..."

அது உங்களுக்கே உரித்தான அருமையான கிரீடம் அதை நீங்கள் சுமந்து கொண்டிருக்கிறீர்கள்...

பெருமை கொள்ளுங்கள்

இந்த உலகமே... மீண்டும் எழும் வலிமையனவர்களின் கதைகளை தான் விரும்புகிறது!

மறக்காமல் உங்கள் உணர்வுகளை என்னிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்...

இந்த பதிவை உங்களைப் போன்ற ஒருவருக்கு பகிர்ந்து கொள்ளுங்கள் இது அவசியமாய் இருக்கலாம்.

வாழ்க வளமுடன்

நன்றி - ஆனந்தி

## "டிப்ஸ்"



அந்த ஹோட்டலில் புதிதாக சர்வர் வேலைக்கு சேர்ந்திருந்த குமரன் அங்குள்ள சட்டதிட்டங்களைக் கேட்டுக் கோபமானான்.
தன் கோபத்தை சக சர்வர் மூர்த்தியிடம் கொட்டினான்.

'அண்ணே நானும் இதுக்கு முன்னாடி ரெண்டு மூணு ஹோட்டல்ல சர்வரா வேலை பார்த்திருக்கேன். அங்கெல்லாம் இந்த மாதிரி கண்டிஷன் கிடையாது!"
அமைதியாய் மேலும் கீழும் தலையாட்டினார் மூர்த்தி.

'ஆறு மாசத்துக்கு ஒரு தடவை... ஒரு மாசம் லீவு கொடுப்பாங்களாம்... அப்பத்தான் வெளியூர்க்காரங்க ஊருக்கு போகணுமாம்' குமரன் சொல்ல.

"பின்னே?... வெளியூர்க்காரங்க சொந்த ஊருக்கு போயி... சொந்த பந்தங்களைப் பார்த்ததும் ரெண்டு மூணு நாள் லீவை... ரெண்டு மூணு மாசம் ஆக்கிட்ட இங்க யாரு வேலை பார்க்கிறது?... அதுக்குத்தான் அப்படி ஒரு சட்டம்!" சிறிதும் கோபமில்லாமல் மூர்த்தி சாதாரணமாய்ச் சொல்ல, ஆச்சரியமானான் குமரன்.

"என்னது இவரு தன்னுடைய கோபத்தை என்கிட்டக் காட்டுவார்னு பார்த்தா இவரு முதலாளிக்கு சப்போர்ட் பண்ற மாதிரியல்ல பேசுறார்!" என உள்ளுக்குள் நினைத்துக் கொண்ட குமரன், மேலும் தொடர்ந்தான்.

"அட... அது கூட தேவலை... இன்னொரு கண்டிஷன் வச்சிருக்காங்களே அது மட்டும் என்னால் கொஞ்சம் கூட ஏத்துக்க முடியல!... இதுக்கு முன்னாடி நான் வேலை செஞ்ச ஹோட்டலிலெல்லாம் கஸ்டமர்ஸ் கொடுத்திருக்கிற டிப்ஸை நாங்களே வெச்சுக்குவோம்... சொல்லப் போனால் அதுதான் எங்க பற்றாக்குறைக்கு ஒரு தீர்வாயிருக்கும்!... ஆனா இங்கே... கஸ்டமர் குடுக்குற டிப்ஸையெல்லாம் அப்படியே கல்லால கொண்டு வந்து குடுத்திடணுமாம்... கொடுமை... கொடுமை!" பற்களைக் கடித்துக் கொண்டு சொன்னான் குமரன்.

அப்போதும் அந்த மூர்த்தி ஒரு வார்த்தை கூட முதலாளியையோ... அந்தச் சட்டத்தையோ எதிர்த்து பேசாதிருக்க குமரனுக்குள் ஒரு சந்தேகம் கிளம்பியது, "ஒருவேளை இந்த மூர்த்தி ஓனருக்குச் சொந்தக்காரனா இருப்பானோ?.. நான்தான் விஷயம் தெரியாம இவன்கிட்ட உளறிட்டிருக்கேனோ?" லேசான அச்சம் உள்ளுக்குள் தோன்ற மூர்த்தியை முறைத்தபடியே அங்கிருந்து நகர்ந்தான் குமரன்.

ஊரில் உள்ள தன் குடும்பத்தின் ஏழ்மை நிலையையும், கணவரை இழந்த தன் தாய் இரண்டு பெண் பிள்ளைகளோடு கிராமத்தில் சிரமத்தோடு வாழ்ந்து கொண்டிருப்பதையும் நினைத்து தன் கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டு. அங்கேயே பணியை தொடர்ந்தான் குமரன்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு.

கல்லாவில் அமர்ந்திருந்த முதலாளி சுந்தர்ராஜ் குமரனை அழைத்தார்.

"குமரா... நீ வேலைக்கு சேர்ந்த ஆறு மாசம் ஆச்சு இன்னும் ஒரு தடவை கூட ஊருக்கு போகல... அதனால நாளையிலிருந்து உனக்கு ஒரு மாசம் லீவு தரேன் ஊருக்குப் போயிட்டு ஒரு மாசம் கழிச்சு வா"

ஊருக்கு போகப் போகிறோம் என்கிற சந்தோஷம் அந்த வினாடியே அவனுக்குள் பரவ ஒரு மகிழ்ச்சிப்பூ அவன் முகத்தில் மலர்ந்தது.


"சரிங்க முதலாளி" சொல்லி விட்டுத் திரும்பியவனை, "ஒரு நிமிஷம் நில்லு குமரா!" என்ற முதலாளி கீழே குனிந்து ஒரு கவரை எடுத்து அவனிடம் தந்து, "இதுல 40 ஆயிரம் ரூபாய் இருக்கு ஊருக்கு போகும் போது அம்மாவுக்கும், தங்கச்சிகளுக்கும் துணிமணி எடுத்துட்டுப் போ... ஸ்வீட்டெல்லாம் வாங்கிக் கொண்டு போய்க் கொடு"

"நாப்பதாயிரமா?... ஐயோ முதலாளி இந்தப் பணத்தை நான் எப்படித்....?".

"திருப்பிக் கொடுக்கிறது?"ன்னு தானே கேட்கறே?... நீ திருப்பித் தரவே வேண்டியதில்லை... ஏன்னா இது என்னோட பணமல்ல... உன் பணம்!... கஸ்டமர்ஸ் உங்களுக்குக் கொடுக்குற டிப்ஸை நான் வாங்கிக்கிறேன்.. அது ஏன் தெரியுமா?... நீ வெச்சிருந்தா ஏதாவது ஒரு செலவுதான் பண்ணிருப்பே... சேமிச்சு வைக்க மாட்டே!... அதனாலதான் அதை நான் வாங்கி உன் சார்பில் சேமித்து வைத்திருக்கிறேன் !.. அது கூட கொஞ்சம் என்னோட பணத்தையும் போட்டுத்தான்... இப்பத் தர்றேன் வாங்கிட்டு போ"

தன்னையும் அறியாமல் அவனுடைய கைகள் முதலாளியைக் கும்பிட்டன.

(முற்றும்)



-முகில் தினகரன்,
கோயமுத்தூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



“டாக்டர் பத்து நாளா ஒரே கனவா வருது!”

“கனவு தானே வருது... அதனாலென்ன?”

“இல்ல டாக்டர். இடை இடையே இந்தக் கனவை உங்களுக்காக வழங்குபவர்கள்னு விளம்பரம் வேற வருதே!”



## தினம் ஒரு சமையல்



### கறிவேப்பிலை மிளகு குழம்பு



**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| கறிவேப்பிலை | - 2 கைப்பிடி அளவு |
| மிளகு | - 20 |
| உளுத்தம்பருப்பு | - 2 டேபிள்ஸ்பூன் |
| துவரம்பருப்பு | - ஒரு டேபிள்ஸ்பூன் |
| சீரகம் | - ஒரு டீஸ்பூன் |
| காய்ந்த மிளகாய் | - 2 |
| புளி | - நெல்லிக்காய் அளவு |
| கடுகு | - ஒரு டீஸ்பூன் |
| எண்ணெய் | - 4 டீஸ்பூன் |
| உப்பு | - தேவையான அளவு. |

**செய்முறை:**

வாணலியில் எண்ணெய் விட்டு மிளகு, காய்ந்த மிளகாய், உளுத்தம்பருப்பு, துவரம்பருப்பு, சீரகம் ஆகியவற்றை நன்றாக வறுத்து வைத்துக்கொள்ளவும். கறிவேப்பிலையை எண்ணெய் விட்டு வதக்கி, வறுத்து வைத்தவற்றுடன் சேர்த்து புளி, உப்பு சேர்த்து, நீர் விட்டு நைஸாக மிக்ஸியில் அரைத்து கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு சூடானதும் கடுகு தாளித்து, அரைத்ததை போட்டு கொதிக்கவிட்டு ஓரங்களில் எண்ணெய் பிரிந்து வரும் போது இறக்கவும். சுவையான கறிவேப்பிலை மிளகு குழம்பு தயார்.

## அரிவாள்மனைப் பூண்டு நன்மைகள்



அரிவாள்மனைப் பூண்டின் வேர், விதை இவைகளை இரண்டுக்கு ஒன்று என்ற விகிதத்தில் கலந்து பொடி செய்து சர்க்கரையுடன் சேர்த்துத் தினமும் 3 வேளை சாப்பிட்டால் ஒரு வாரத்தில் உடலில் ஏற்படும் எரிச்சல் குணமாகும்.

அரிவாள்மனைப் பூண்டு பொடியை 10 கிராம் எடுத்து 80 மி.லி. நீரில் கொதிக்க வைத்து 20 மி.லி. யாகக் காய்ச்சி வடிகட்டி ஒரு டம்ளர் காலை மட்டும் குடித்து வர மூக்கு, வாய் மற்றும் உடலில் ஏற்படும் இரத்த ஒட்டத்தைக் கட்டுப் படுத்தும்.

அரிவாள்மனைப் பூண்டின் இலையைக் கசக்கி வெட்டுக் காயத்தில் பற்றிட இரத்தப் பெருக்கு நிற்கும். அரிவாள்மனைப் பூண்டின் இலையுடன் சம அளவு குப்பை மேனி இலை, பூண்டுப் பல் 2, மிளகு 3 சேர்த்து அரைத்து புன்னைக் காய் அளவு உள்ளுக்குக் கொடுத்து காயத்திலும் பூச அவை குணமாகும். (உப்பு, புளி நீக்க வேண்டும்).


அரிவாள்மனைப் பூண்டு இலைகைப்பிடி அளவு, குப்பைமேனி இலை கைப்பிடி அளவு, பூண்டு2 பல், மிளகு3, ஆகியவற்றை அரைத்து, புன்னைக்காய் அளவு உள்ளுக்குக் கொடுத்து, காயத்திலும் வைத்துக் கட்ட பூச்சிக்கடியினால் ஏற்படும் நஞ்சு முறியும்.

அரிவாள்மனை இலை, கிணற்றுப் பாசான இலை ஆகியவற்றை சம அளவு எடுத்து அரைத்து, புழுவெட்டு உள்ள இடத்தில் தடவினால், விரைவில் மாறும். அரிவாள்மனைப் பூண்டு இலையோடு சிறிது மஞ்சளைச் சேர்த்து அரைத்து சொறி, சிரங்கு மீது தடவி வர குணமாகும்.

அரிவாள்மனை இலை, சம அளவு குப்பைமேனி இலையையும் சேர்த்து அரைத்துப் பற்றிட, படர்தாமரை குணமாகும். அரிவாள்மனைப் பூண்டு இலை, கிணற்றுப் பாசான இலை, எலும்பு ஒட்டி இலை ஆகியவற்றை சம அளவு எடுத்து அரைத்துப் காயத்தின் மீது பற்றிட உள்ள வீக்கம் குறையும்.




## ரவி மோகன் நடிப்பில் உருவாகியுள்ள ஜீனி



ரவி மோகன் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் ஜீனி. இப்படத்தில் ரவி மோகனுக்கு ஜோடியாக கீர்த்தி ஷெட்டி, கல்யாணி பிரியதர்ஷன் ஆகிய 2 கதாநாயகிகள் நடித்துள்ளனர்.

ஜீனி படத்தின் ஃபர்ஸ்ட்லுக் மற்றும் போஸ்டர்கள் கடந்தாண்டு வெளியானது. அதில் அலாவுதீன் பூதத்தைப்போல் ரவி மோகன் இருந்தது ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது.

இப்படத்தை அறிமுக இயக்குனரான புவனேஷ் அர்ஜுனன் இயக்கியுள்ளார். ஐசரி கணேஷின் வேல்ஸ் பிலிம்ஸ் இண்டர்நேஷனல் தயாரிக்கிறது. ஃபேண்டசி மற்றும் காமெடி கதைக்களத்துடன் அமைந்துள்ள ஜீனி படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார். இப்படம் ரவி மோகன் திரைப்பயணத்தில் மிகப் பெரிய பொருட் செலவில் எடுக்கப்பட்ட படமாகும்.

இந்நிலையில், ஜீனி படத்தின் அப்டி அப்டி பாடல் இன்று இரவு 8.10 மணிக்கு வெளியாகும் என்று படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.



சின்னத்திரையில் மிகவும் பிரபலமான நடிகையாக வலம் வருபவர் ஷபானா ஷாஜகான். இவர் செம்பருத்தி சீரியல் மூலம் அறிமுகமாகி, பின் Mr. மனைவி எனும் சீரியலில் நடித்து வந்தார். சமீபத்தில் நிறைவு பெற்ற குக் வித் கோமாளி சீசன் 6ல் இரண்டாவது இடத்தை பிடித்து ரூ. 2 லட்சம் பரிசு தொகையை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. சமூக வலைத்தளத்தில் ஆக்டிவாக இருப்பவர் நடிகை ஷபானா. தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பதிவிடுவார். இந்த நிலையில், பிங்க் நிற உடை அணிந்து எடுத்துக்கொண்ட புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

## பத்ரிநாத் கோவிலில் நடிகர் ரஜினிகாந்த் சாமி தரிசனம்



சூப்பர் ஸ்டார் நடிகர் ரஜினிகாந்த் தான் நடித்த படம் வெளியாகும் முன்பு இமயமலைக்கு ஆன்மீக யாத்திரை மேற்கொள்வதை வழக்கமாக வைத்துள்ளார். ஆன்மீகவாதிகளுடன் அவருக்கு நட்பு அதிகரித்த பிறகு அவரிடம் இந்த பழக்கம் உருவானது.

அந்த வகையில், தற்போது ரஜினிகாந்த் ஒரு வார கால ஆன்மீகப் பயணமாக இமயமலை சென்றுள்ளார். இமயமலை பயணம் மேற்கொண்டுள்ள நடிகர் ரஜினிகாந்த் பத்ரிநாத் செல்வதாகவும், அதனை தொடர்ந்து பத்ரிநாத்திலிருந்து பாபா குகைக்கு செல்லும் ரஜினிகாந்த் ஒரு வாரம் அங்கு தங்க இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள பத்ரிநாத் கோவிலில் நடிகர் ரஜினிகாந்த் சாமி தரிசனம் செய்துள்ளார். முன்னதாக, பத்ரிநாத் கோவிலுக்கு வந்த நடிகர் ரஜினிகாந்த்துக்கு கோவில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பத்ரிநாத் சன்னதியில் பிரசாதம் வழங்கப்பட்டது.

நடிகர் ரஜினிகாந்த் பத்ரிநாத் கோவிலில் சாமி தரிசனம் செய்தது தொடர்பான புகைப்படங்களும், வீடியோக்களும் சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com**